பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

நாள்: 6 பிரமோதூத வருடம் பங்குனி மீ 10 உ ஞாயிற்றுக்கிழமை [24-03-1991] UTHAYAN-A Lively National Tamil Daily மலர்: 117

# பேச்சுக்குப் புலிகளை அழைக்கிறார் பிரேமா!

## நிலாவெளியிலும் ஐவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 24

திருகோணமலை மாவட்டம் நிலாவெளியில் கடந்த புதன் அன்று காலை 9 மணியளவில் ''நிலாவெளி பீச் ஹோட்டலில்'' வேலை செய்துகொண்டிருந்த ஐந்து தமிழர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

நிலாவெளி முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்ட இந்த ஐவரும் இன்னும் விடுவிக்கப்படவில்லை. [உ]

## ஜூனில் மாகாண சபைத் தேர்தலாம்

கண்டி, மார்ச் 24

தமிழீழ விடுதலைப் புலிகளைச் சமாதானப் பேச்சுக்கு வருமாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச அழைப்பு விடுத்திருக்கிறார். பேச்சுவார்த்தைக்கான கதவுகள் இன்னும் திறந்தே இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

கண்டி மாநகர சபையின் 125ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

எனினும் அவர் தமது பழைய நிபந்தனையை மாற்றவில்லை. ''ஆயுதங்களைப் போட்டுவிட்டு அவர்கள் சமாதானப் பேச்சுக்கு இப்போதும் வரலாம்'' என்று ஜனாதிபதி சொன்னார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துகொள்ள இன்னமும் வழிதிறந்தே உள்ளது—

ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தல்களில் கலந்துகொள்ள விடுதலைப் புலிகள் முன்வரவேண்டும்—

ஜூன் மாதத்தில் தேர்தல் நடத்த திட்டமிட்டுள்ளோம். விடுதலைப் புலிகள் பேச்சுக்கு முன் வந்தால் வடக்கு-கிழக்கு மக்கள் தமது எதிர் காலத்தை நிர்ணயிக்க தேர்தலில் பங்குபற்ற வாய்ப்புக் கிடைக்கும்— என்றார் ஜனாதிபதி பிரேமா. [அ-எ-3]

## சிலாவத்துறை தாக்குதலில் 23 படையினர் உயிரிழப்பு

### இராணுவ வட்டாரங்கள் தகவல்

சிலாவத்துறை, கொக்குப்படையான் முகாம்கள் மீதான தாக்குதல்களில் 23 படையினர் உயிரிழந்தனர் என்றும் 56 படையினர் படுகாயம் அடைந்தனர் என்றும் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இத் தாக்குதல்கள் குறித்து வேறு தகவல்கள் ஏதும் நேற்றுக் கிடைக்கவில்லை.

இரு தரப்பினரும் விரிவான அறிக்கைகளையோ வேறு தகவல்களையோ நேற்றும் வெளியிடவில்லை. [ஒ-எ]

## சுன்னாகம், மானிப்பாயில் மக்கள் அஞ்சலி - துக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

சிலாவத்துறையில் இடம்பெற்ற மோதலில் வீரமரணமடைந்த போராளிகளின் புகழுடம்புகள் மக்கள் அஞ்சலிக்காக மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், சுன்னாகத்திலும் நேற்று வைக்கப்பட்டிருந்தன

ஏராளமான மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

சுன்னாகம், மானிப்பாய் பகுதிகளில் நேற்று கடைகள் மூடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

போராளிகளின் புகழுடம்புகள் நேற்று கோப்பாய் மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டன. [ஒ-15]

## ஆனையிறவு முகாம் மீது அருள் - 89 தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச் 24

ஆனையிறவு முகாம் நோக்கி நேற்று முன் தினம் விடுதலைப் புலிகள் அருள்-89 தாக்குதல் நடத்தினர்.

இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து தெரியவரவில்லை.

அதே தினம் ஆனையிறவு உல்லாச விடுதியில் இருந்து உப்பளம் நோக்கி இராணுவத்தினர் சென்ற போதும் விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அன்று காலையிலும் மாலையிலும் பரந்தன் பக்கமாக ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன. [ஒ]

## கோப்பாயில் ஹெலி சூடு

யாழ்ப்பாணம் மார்ச் 24

நேற்று மாலை 5 மணியளவில் கோப்பாய்ப் பகுதியில் ஹெலித் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் ஆர். சத்தியலிங்கம் [வயது 32] வண்ணார்பண்ணை என்பவர் காயமடைந்தார். அவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். [ஒ-5]

## மகிழூர் சுற்றிவளைப்பு; 14 தமிழர்கள் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 24

கடந்த செவ்வாயன்று மட்டக்களப்பு மாவட்டம் மகிழூர் என்ற இடத்தை ஸ்ரீலங்கா இராணுவத்தினரும் ரெலோவினரும் இணைந்து சுற்றிவளைத்தனர். அங்கிருந்த 14 அப்பாவித் தமிழர்களை அவர்கள் கைது செய்து களுவாஞ்சிக்குடி முகாமிற்குக் கொண்டு சென்றனர்.

கைதானோர் இன்னும் விடுவிக்கப்படவில்லை என்று தெரிய வருகிறது. [க]

## இந்திய தேர்தல் மே 18இல்

புதுடில்லி, மார்ச் 24

இந்திய நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் எதிர்வரும் மே மாதம் 18 அல்லது 19 ஆம் திகதிகளில் ஆரம்பமாகலாம்.

பிரதம தேர்தல் ஆணையாளர் திரு. டி. என். சேஷன் இத்தகவலை நேற்று வெளியிட்டார். [ஒ-எ]

## வயலுக்குச் சென்றோர் மீது பெரியபோரதீவில் சூடு!

யாழ்ப்பாணம், மார்ச் 24

மட்டக்களப்பு மாவட்டம் பெரியபோரதீவு முகாமில் இருந்து கடந்த புதன்கிழமை இரவு 8 மணியளவில் வெளியேறிய இராணுவத்தினரும் ரெலோவினரும் கிராமத்தின் ஒரு பகுதியில் இரவு முழுவதும் பதுங்கி இருந்தனர்.

அடுத்த நாள் [வியாழன்] காலை வயலுக்குச் சென்றவர்கள் மீது அவர்கள் வேட்டுக்களைத் தீர்த்தனர். ஒருவர் காயமடைந்தார். அறுவர் கைது செய்யப்பட்டனர்.

முகாமில் வைத்து அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ]

## தேசிய அரசியலுக்கு கருணாநிதி பாயலாம்!

சென்னை, மார்ச் 24

தி. மு. க. தலைவர் கலைஞர் கருணாநிதி மாநில அரசியல் மட்டத்தைக் கைவிட்டுவிட்டு, தேசிய அரசியலுக்குப் பாயலாம் என்று இந்திய அரசியல் வட்டாரங்களில் ஊகம் தெரிவிக்கப்படுகிறது.

பீஹார் மாநிலத்தில் அண்மையில் தேசிய முன்னணி நடத்திய பிரசாரக் கூட்டத்தில் திரு. கருணாநிதியும் கலந்து கொண்டு பேசியிருப்பது, தேசிய அரசியலுக்கு தம்மை அறிமுகப்படுத்திய ஒரு நடவடிக்கையாகக் கருதப்படுகிறது என்றும் கூறப்படுகிறது.

இதற்கிடையில்—

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடலாமா என்று தாம் சிந்தித்து வருவதாக கருணாநிதி கூறியிருக்கிறார்.

அடுத்த சட்டசபைத் தேர்தலில் மாநில அரசைக் கைப்பற்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஷப்றாவின் புதிய கட்டடம் நாளை திறக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 24

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனங்களில் ஒன்றான ஷப்றா தனக்கெனச் சொந்தமாகப் புதிய கட்டடம் ஒன்றை நிர்மாணித்துள்ளது.

பிரஸ்தாப ஐந்து மாடிக் கட்டடம் நாளை திங்கட்கிழமை மிக அடக்கமாக சம்பிரதாய முறைப்படி திறந்து வைக்கப்படும்

கொழும்பு மாநகரின் மத்தியில், பம்பலப்பிட்டியில் டுப்ளிகேஷன் வீதியில் [ஆர். ஏ. டி. மெல் மாவத்தையில்] புதிய மாடிக் கட்டடம் அமைந்துள்ளது.

இப்புதிய கட்டடத்தில் ஷப்றாவின் தலைமை அலுவலகத்தோடு ஏனைய பிரபல வர்த்தக நிறுவனங்கள் பலவற்றின் அலுவலகங்களும் அமைய உள்ளன. சர்வதேசப் புகழ் பெற்ற ஏ. என். இஸட். கிறின்ட்லேய்ஸ் வங்கிக் கிளையும் ஒன்றாகும்.

இலங்கை மத்திய வங்கியின் ஆகப் பிந்திய சட்டவிதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட 21 நிதி நிறுவனங்களில் ஷப்றா

[4 ஆம் பக்கம் பார்க்க]

## டில்லியில் குண்டு; 10 பேர் பலி!

புதுடில்லி, மார்ச் 24

புதுடில்லி - திலக்நகரில் உள்ள பஸ் தரிப்பு நிலையத்தில் குண்டு ஒன்று வெடித்ததில் 10 பேர் கொல்லப்பட்டனர். 90 பேர் வரையில் காயமடைந்தனர். அவர்களில் 50 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக அறிவிக்கப்பட்டது. [ஒ-எ]

## தி. மு. க. தோல்வியுற்றால் அதுபோராளி அமைப்பாகும்?

சென்னை, மார்ச் 24

திராவிட முன்னேற்றக் கழகம் மாநில ஆட்சியை மீண்டும் கைப்பற்றத் தவறும் பட்சத்தில், அது தனிநாடு கோரும் ஒரு போராளி அமைப்பாகச் செயற்படலாம்

சென்னை அரசியல் வட்டாரங்களில் இவ்வாறு பரவலான பேச்சடிபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தி. மு. க. அப்படிச் செயற்படும் பட்சத்தில் அதற்கு உறுதுணையாக இருக்க திராவிடர் கழகம் முன்வந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. [ஒ-எ]

## முச்சந்தி முரளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நிதான விலையில் உப்பு விற்பனைக்கு உண்டு. கருவாட்டுக்குத் தேவையான அரைத்த உப்பும், கட்டி உப்பும் எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். கட்டி உப்பு மொத்தவிலை 6.50, கட்டி உப்பு சில்லறை விலை 7.00 கிடைக்குமிடம் ஸ்ரீ சாயிமில் 76[222], ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [16180]

சறுட்டு, வெள்ளை கலந்த புதிய நிறங்களில் அழகான பொமனேறியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். [16197]

## தேவை

பாவித்த சம்போ, ஒடிக்கலோன், Gum [கம்] Vicks போத்தல், பவுடர் டப்பா, பேசல்பொயின்ட் பேனா சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9 மணி முதல் 12 மணி வரை வாங்கப்படும். S. சத்தியன் 55, மணிக்கூண்டு வீதி, கொழும்பு ஸ்ரூடியோ பின்புறம், யாழ்ப்பாணம். [ஓ-5867]

## தவறிவிட்டது

16 - 3 - 91 அன்று புளியங்குளத்திற்கும், ஓமந்தைக்கும் இடையில் எனது பிரயாணப்பை தவறிவிட்டது. அதில் தேசிய அடையாள அட்டை, பாஸ்போர்ட், வங்கிப் புத்தகம் [இல. 4653] காசோலை என்பனவும் அடங்கியுள்ளன. கண்டெடுடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். ச. கனகலட்சுமி இல. 337/7 தருமபுரம். [16161]

18-3-91 அன்று சங்குப்பிட்டியில் வவுனியா செல்லும் மினிபஸ்ஸில் எனது கடவுச்சீட்டு, காசோலைப் புத்தகம், நாட்குறிப்புக்கள், மூக்குக் கண்ணாடி, பிரஜா உரிமைப் புத்தகம், மகனின் அடையாள அட்டை, வைப்புச் சான்றிதழ்கள் என்பன அடங்கிய கைப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்திலோ அல்லது வே. குணநாயகம் 105, புகையிரத நிலைய வீதி, கொக்குவில் கிழக்கு என்னும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். சன்மானம்வழங்கப்படும். [16189]

## சிக்மா பம்ஸ்

உங்கள் நீர் இறைக்கும் இயந்திரங்களை அதி விரைவில் திருத்தி புனரமைத்துக் கொள்ளவும், உதிரிப் பாகங்கள் வாங்கவும் நாடுங்கள். யுனைட்டட் அக்றோ என்ஜினியரிங் 274/1, ஆஸ்பத்திரி வீதி, [பெரியாஸ்பத்திரி முன் பாக] யாழ்ப்பாணம். [சி-4807]

## மணமகன், மணமகள் தேவை

மெதடிஸ்த மிஷன் மதத்தைச் சார்ந்த 47 வயதுடைய அரச நிர்வாக தரத்திலுள்ள சகோதரனுக்கும், 38 வயது உடைய படித்த அழகிய சகோதரிக்கும் தனித்தனியே அல்லது மாற்றாக செய்ய தாயார் விரும்புகின்றார். மணமகன் அழகிய படித்தவராகவும், சீதனமும் கவனிசகப்படும், மணமகளுக்கும் சீதனம் வழங்கப்படும். வேறு மதத்தவர்களும் ஆலோசிக்கப்படும் வி. இல. 195 மே/பா உதயன், யாழ்ப்பாணம். [16171]

## நோவு எண்ணெய்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெய், எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். [14925]

## கல்வி

G. C. E. [O/L] இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் தொடர் வகுப்புக்கள் மூலம் 20 மணித்தியாலத்திலிருந்து, 40 மணித்தியாலத்திற்குள் ஆரம்ப அறிவிலிருந்து விசேஷ சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. [16602]

## மணமகள் தேவை

யாழ். இந்து ஜேர்மனியில் இருக்கும் 39 வயதுடைய மணமகனுக்கு அழகும், குணமும் உடைய மணமகள் உடன் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது ஜேர்மனிக்கு அனுப்பி வைக்கப்படும். முழு விபரத்துடன் தொடர்பு இல. 198 மே/பா உதயன், யாழ்ப்பாணம் [16198]

யாழ். இந்து 29 வயது B Sc சிவில் பொறியியலாளர் 1st Class Batch - Top பேராதனை Scholar M. Sc. Ph. D கேம்பிறிட்ஸ் சுவாதி செவ்வாய்க் குற்றமற்ற மணமனுக்கு டாக்டர் அல்லது விஞ்ஞான விரிவுரையாளர் பெண் தேவை. தொடர்பு: A. B C. D. E, 328, நாவலர் வீதி, ஆனைப்பந்தி [16194]

## SLEAS

Sleas - பரீட்சைக்குரிய நுண்ணறிவு, பொது உளச்சார்பு, கிரகித்தல் நூல்கள் எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆக்கியோன்: க. குணராசா, எம். ஏ. [16184]

## மாணவர் அகராதி

வரதர் மாணவர் அகராதி [ஆங்கிலம் - தமிழ்] ஆங்கிலம் பயில்வோருக்கு அரிய துணை நூல். 18,400 சொற்கள் கொண்டது நல்ல தமிழில் கருத்துக்கள். மலிவு விலை ரூபா 95 மட்டுமே. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். தொகையாகப் பெறுவதற்கு ஆனந்தா புத்தகசாலை 226, காங்கேசன்துறை வீதி, & பூபாலசிங்கம் புத்தகசாலை, பனை நிலையம், யாழ்ப்பாணம். [16198]

# 39-ம் நாள் நினைவஞ்சலி

## அமரர் பிச்சாண்டி பசுபதி

[புங்குடுதீவு மத்தி]

தோற்றம்: 12 - 03 - 1921 மறைவு: 14 - 02 - 1991

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

— குடும்பத்தினர்.

புங்குடுதீவு-12. [16207]

# ஆத்ம சாந்தி அழைப்பும் 31-ம் நாள் நினைவஞ்சலியும்



தோற்றம்: 20 — 10 — 1960

மறைவு: 22 — 02 — 1991

## செல்லையா செல்வநாதன்

அன்பின் இருப்பிடமாய் பண்பின் உறைவிடமாய் பாசத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து, எங்களை எல்லாம் வழி காட்டியதுடன் திடீரென எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புத் தந்தையார், குடும்பத்தினர், நண்பர்கள்.

8/1, சிவன்பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். [16210]

பாடசாலை வீதி, ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை.

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 20 — 05 — 1955

மறைவு: 15 — 03 — 1989

## அமரர் முத்து மனோகரன்

[வைத்தியசாலை ஊழியர், பருத்தித்துறை]

அன்பின் உறைவிடமே! எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி இரண்டு வருடங்கள் முடிவுறுகையில் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

பெற்றோர், சகோதரர்கள், மைத்துனர்மார், மருமக்கள், உற்றார், உறவினர்கள்.

கூவில், புலோலி தெற்கு, புலோலி. [3888]

# அன்புப் பெற்றோர்களின் முதலாவது நினைவஞ்சலி





திரு. கனகரத்தினம் சிவசம்பு அவர்கள்

மலர்வு: 22 - 03 - 1905

உதிர்வு: 06 - 07 - 1989

திருமதி சிவசம்பு சொர்ணம்மா

மலர்வு: 11 - 02 - 1911

உதிர்வு: 03 - 04 - 1990

திதி பங்குனி மாதம், பூர்வபக்கத்து நவமி 24-03-1991 ஞாயிற்றுக்கிழமை

எம்மை ஆளாக்கி வைத்த அன்புடைப் பெற்றோர்களே நீங்கள் இருவரும் குடும்பத்தின் ஒளி விளக்குகளாகத் திகழ்ந்து பிரகாசத்தைத் தந்தீர்கள்.

தாங்கள் இருவரும் பூவுலக வாழ்வை நீத்து விண்ணுலகு அடைந்து ஓராண்டு கழிந்த போதிலும் தங்களைப்பற்றிய நன்றி கலந்த எண்ணங்கள் மறையவில்லை. தங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் என்றும் நிலைத்து இருக்கும்.

தங்கள் இருவரினதும் ஆன்ம சாந்தியின் பொருட்டு, நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாளின் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்.

திருமதி சிவஈஸ்வரி குலேந்திரா [மகள்], செல்வன் குலேந்திரா சிவேந்திரம் [பேரன்].

''ஈஸ்வரி வாசா'' நந்தாவில், கொக்குவில். [16173]

# ★ திருமண அழைப்பு ★

மணமகன்: செல்வன் மு. இரகுநாதன் அவர்கள் [த பினான்ஸ் கொம்பனி - யாழ்ப்பாணம்]

மணமகள்: செல்வி சி. ஸ்ரீநாகபூஷணி (நளா)

நாள்: 27 - 03 - 1991 (தமிழ் பங்குனி - 13) புதன்கிழமை

நேரம்: காலை 9 மணி- 24 நிமிஷம் முதல் 11 மணி வரையும் உள்ள கடக லக்கின சுபவேளை

மங்கள நாண் பூணல்: மாத்தனை முருகன் கோயில் - சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு.

★ அழைப்பவர்கள் ★

திரு க. முத்தையா
69 A, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
[3891]

திரு. திருமதி S. சிவராஜன்
சம்பியன் லேன் - மாத்தனை,
கொக்குவில் கிழக்கு.
கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பரிசீலனை தேவை

வடபகுதியில் உள்ள சப்த தீவுகளும், ஏனைய சின்னஞ் சிறிய தீவுகளும் இன்னும் ஐம்பது ஆண்டுகளில் கடலில் அமிழ்ந்து போய் விடுமாம்! அதே போல கிழக்கில். மட்டக்களப்பு வாவி மேலும் நிலப்பகுதிக்குள் புகுந்து விடுமாம். இலங்கைச் சூழல் காங்கிரஸ் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

விஞ்ஞான ரீதியான காரணங்களின் அடிப்படையிலேயே சூழல் காங்கிரஸின் எச்சரிக்கை எழுந்துள்ளது

பூமியின் வெப்ப நிலை உயரும் போதே கடலின் நீர் மட்டம் உயருகிறது. எப்படி? பூமியின் உஷ்ணம் அதிகரிக்க அதிகரிக்க, வட, தென் துருவங்களில் உள்ள பனிக்கட்டிகள் உருகுகின்றன. அதனால் கடல் நீரின் கன அளவு அதிகரிக்கிறது. அதன் விளைவாகக் கடல் மட்டம் உயர்ந்து, நிலப்பகுதிகளை - கடலின் நடுவே உள்ள தீவுகளை-கடல் விழுங்கி விடுகிறது. மாலைதீவுகள் இன்னும் சில வருடங்களில் இல்லாமற் போய்விடும் என்ற எச்சரிகை ஏற்கனவே வந்துவிட்டது.

கடல் நீர் உயரக் காரணமாக உள்ள பூமியின் வெப்ப அதிகரிப்புக்குக் காரணம் என்ன? எம்மைச் சூழ்ந்துள்ள வளியில் அடங்கியிருக்கும் வாயுக்களில் காபனீரொட்சைட்டும், மீதேனும் அதிக அளவில் வெப்பத்தை உறுஞ்சும் தன்மையுடையன. காற்றில் அவற்றின் அளவு அதிகரித்ததும் பூமியின் சராசரி வெப்ப நிலை உயருகிறது.

நிலக்கரி, எண்ணெய், நிலவாயு, விறகு ஆகியவற்றை எரிக்கும் போது காபனீரொட்சைட்டின் அளவு வளியில் மிக அதிகமாகிறது. குவைத்தில் எண்ணெய்க் கிணறுகள் எரிவதால் வளியில் மேலும் அதிக அளவு காபனீரொட்சைட் சேரப் போகிறது வளியில் இருக்கும் காபனீரொட்சைட்டை மரங்கள் உறிஞ்சுவதுண்டு. ஆனால் மரங்களைப் பெரும் எண்ணிக்கையில் தறிப்பதால் காபனீரொட்சைட்டின் அளவைக் குறைக்க முடிவதில்லை.

காபனீரொட்சைட்டை விட இருபது மடங்கு வெப்பத்தை உறிஞ்சும் மீதேன், நெல் வயல்கள், குளங்கள் ஏனைய நீர் நிலைகளில் இருந்து வெளியேறுகிறது இக் காரணங்களாலேயே பூமியின் இப்போதைய சராசரி வெப்பநிலையான 15 பாகை செல்சியஸ் இன்னும் 30 ஆண்டுகளில் 19.5 செல்சியஸாக உயரும் என்று விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளார்கள்.

எனவே உலகில் உள்ள எல்லா நாட்டு மக்களும் பூமியை வெப்பமாக்காமல் இருக்க வேண்டும்; வளியை மாசுபடுத்தாமல் இருக்க வேண்டும் என்பதில் அக்கறை கொள்ளாவிடில், ஐந்து கண்டங்களிலும் உள்ள தீவுகள் யாவுமே அழியும் ஆபத்து உண்டு. காலம் முந்தும் பிந்தலாமே தவிர, தீவுகள் கடல் நீரில் மூழ்குவது தடுக்க முடியாததாகிவிடும்.

இத்தகைய சூழ்நிலையில், வடபகுதித் தீவுகள், மட்டக்களப்பு வாவி சம்பந்தமான எச்சரிக்கையை, பொருட்படுத்தாமல், கவனத்தில் கொள்ளாமல் இருக்க முடியுமா? வெள்ளம் வரு முன்னரே அணைகட்ட வேண்டும். இப்போதிருந்தே தடுப்பு வழிகள், மாற்று வழிகள் குறித்தான பரிசீலனைகள் ஆரம்பமாக வேண்டும்.

## வங்கி வெற்றிடங்கள்

கொழும்பு, மார்ச் 24

இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் அபிவிருத்தி வங்கி ஆகியவற்றில் இந்த ஆண்டு ஏற்படும் வெற்றிடங்கள், கடந்த ஆண்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களைக் கொண்டே நிரப்பப்படும்.

கொள்கை திட்டமிடல் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

1990 மே மாதம் நடைபெற்ற வங்கி எழுதுவினைஞர் மற்றும் தட்டெழுத்தாளர் போட்டிப் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்ற 450 பேருக்கு மாவட்டத்திறமைப் புள்ளி மற்றும் இன விகிதாசார அடிப்படையில் இதுவரை நியமனங்கள் வழங்கப்பட்டன என்றும் அவர் சொன்னார். [இ-எ]

# கப்பலில் வந்த பாடப் புத்தகங்கள்

# தேங்கிக் கிடந்து தூசி படிகின்றன

## பளை கொத்தணி மாணவர்கள் பாதிப்பு

தாளையடி, மார்ச். 24

மாணவர்கள் வெறுங் கையுடன் பாடசாலை செல்கிறார்கள். ஆனால் கொழும்பிலிருந்து வந்த புத்தகங்கள், கட்டடமொன்றில் தூசி படிகின்றன

இதுபற்றிக் கூறப்படுவதாவது;

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்குத் தேவையான புத்தகங்கள் கொழும்பில் இருந்து வலைப்பாட்டுத்துறைமுகம் ஊடாக கப்பலில் ஏற்கனவே வந்து சேர்ந்து விட்டன.

ஆனால் இப்பாடப் புத்தகங்கள் இன்னமும் கிளிநொச்சி மாவட்டத்தின் பளைக் கொத்தணிப் பாடசாலை மாணவர்களின் கைக்கு எட்டவில்லை

இதனால் இந்த மாணவர்கள் கைக்கெட்டியது வாய்க்கெட்டாத நிலையில் உள்ளார்கள்.

பாடப் புத்தகங்களை பூநகரியிலிருந்து பளைக்குக் கொண்டு வந்து சேர்ப்பதற்கே, இத்தாமதம் ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. [இ-144]

## 30 அகதிக் குடும்பங்களுக்கு குடிசைகள் அன்பளிப்பு

சாவகச்சேரி, மார்ச் 24

இராணுவநடவடிக்கையால இடம் பெயர்ந்து பலாலிப் பகுதியிலிருந்து வந்த 30 அகதிக்குடும்பங்களுக்கு சரசாலையில் அமைக்கப்பட்ட குடிசைகள் கையளிக்கப்பட்டன.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உதவியுடன் யாழ் செஞ்சிலுவைச் சங்க மேற்பார்வையில் நிறுவப்பட்ட இக் குடிசைகளை செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த திருவாளர்கள் ர. இராமதாஸ், கே. மோகன் ஆகியோர் கையளித்தனர்.

அகதிகள் குடும்பங்களுக்கு உலர் உணவுவகைகளும் சமையல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. [இ - 31]

### சங்கங்களில் வாழைப்பழமும்

சாவகச்சேரி ப. நோ. கூட்டுறவுச் சங்கக் கிளைகள் சிலவற்றில் வாழைப்பழ வியாபாரமும் நடைபெறுகிறது. [இ-31]

## மருதங்கேணிப் பகுதியில் உணவுப் பயிருடன் கஞ்சா

தாளையடி, மார்ச் 24

மருதங்கேணிப் பகுதியில் உணவுப் பயிருடன் கஞ்சா செடியும் பயிரிடப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினரே இதனைக் கண்டுபிடித்து கஞ்சா செடியை அழித்ததுடன் சம்பந்தப்பட்டவர்கள் மீது விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளார்கள். [இ-144]

### ரஞ்சனின் இடம் ரணிலுக்கு

கொழும்பு, மார்ச் 24

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவில் மலையகத்தில் இயங்கும் தேசியத் தோட்டத் தொழிற்சங்கத்தின் புதிய தலைவராக அமைச்சர் ரணில் விக்ரமசிங்கா தெரிவு செய்யப்பட்டார்.

மறைந்த அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா சங்கத் தலைவராக இது காலவரை இருந்து வந்தார். [இ-எ]

## கேரதீவு ஊடாகச் செல்லும் பயணிகளிடம் கொள்ளை

தென்மராட்சி, மார்ச் 24

கேரதீவு ஊடாக பயணம் செய்யும் பயணிகளை இனம் தெரியாத கும்பல் ஒன்று வழி மறித்து பணம், பொருட்களை கொள்ளை அடிப்பதாக தெரிய வருகிறது.

கடந்த வாரம் இப்பாதையில் சென்ற குருநகரைச் சேர்ந்த சைக்கிள் வியாபாரி ஒருவரை இக் கோஷ்டியினர் வழிமறித்து அவரிடமிருந்து 5 ஆயிரம் ரூபா பணம் சைக்கிள் உடைமைகளை ஆகியவற்றை கொள்ளையடித்து விட்டு அவரின் கைகால்களைக் கட்டி பற்றையில் போட்டனராம்:

இரு தினங்களின் பின் இவ்வழியால் வந்த ஒருவர் அவரைக் காப்பாற்றினார் என்று கூறப்படுகிறது. [இ-117]

### மக்களின் அஞ்சலி

மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்ற இராணுவ முகாம் தாக்குதலில் களப் பலியான தென்மராட்சி, பச்சிலைப்பள்ளியைச் சேர்ந்த வீரவேங்கைகளின் புகழுடம்புகள் வெள்ளியன்று பளை, கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய இடங்களில் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

ஆயிரக்கணக்கான பொது மக்கள் தமது கண்ணீர் அஞ்சலியை செலுத்தினர். [இ-31-117]

### நோயாளரை பதிவு செய்யக் கோரிக்கை

கொழும்புத்துறை, மார்ச் 24

கப்பலில் கொழும்பு செல்லவிருக்கும் நோயாளர்கள் எதிர்வரும் வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்குப் பின்பும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணி வரையும் யாழ் வைத்திய சாலைப் பணிப்பாளர் காரியாலயத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளும்படி பணிப்பாளர் செல்வி புஷ்பா சண்முகம் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பெயர்களைப் பதிவுசெய்த நோயாயாளர்கள் அனைவரும் தமது பெயர்களைத் திரும்பவும் பதிவு செய்துகொள்ளும்படி அவர் கோரியுள்ளார். [இ-30-15]

அரச கணக்காளர் சேவைப்பரீட்சை:

## இன விகிதாசாரக் கொள்கை அரசினால் தட்டிக் கழிப்பு

1989ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அரச கணக்காளர் சேவைக்கான பரீட்சைத் தேர்வில் இனவிகிதாசாரக் கொள்கை கடைப்பிடிக்கப்படவில்லை என்று அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவுக்கு முறையிடப்பட்டுள்ளது.

கணக்காளர் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களில் 6 தமிழரும் 2முஸ்லிம்கள் மட்டுமே அடங்கியுள்ளனர் என்றும் ஏஞ்சிய 56 பேரும் சிங்களவர் என்றும் அமைச்சருக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. [இ - எ]

## ஈராக்கிற்கு அவசர உதவி வழங்க ஐ.நா. நடவடிக்கை

ஐ நா, மார்ச் 24

ஈராக்குக்கு உணவு மற்றும் மனிதாபிமான உதவிகளை அவசரமாக வழங்க நடவடிக்கை எடுக்கும்படி ஐ. நா. பாதுகாப்புச் சபையின் கட்டுப்பாடுகளை விதிக்கும் கமிட்டி சிபாரிசு செய்து உள்ளது.

ஐ. நா. பொதுச்செயலாளரின் சிறப்புப்பிரதிநிதி ஒருவர் அண்மையில் ஈராக் தலைநகர் பக்தாத் சென்று அங்குள்ள நிலைமையை நேரில் ஆராய்ந்து சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் மீதே இச்சிபாரிசு செய்யப்பட்டு உள்ளது.

ஈராக்கில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. [இ - எ]

# பாதுகாப்பு அமைச்சரையே பாதுகாக்க முடியாத அரசு

## சபையில் சு. க. எம். பி. கிண்டல்

கொழும்பு, மார்ச் 24

பாதுகாப்புத்துணை அமைச்சர் ரஞ்சன் தலைநகர் கொழும்பில் பட்டப்பகலில் கொல்லப்பட்டார். பாதுகாப்புக்குப் பொறுப்பான அமைச்சரையே பாதுகாக்க முடியாத இந்த அரசு மக்களை எவ்வாறு பாதுகாக்கப் போகிறது?

சுதந்திரக்கட்சி எம். பி. திரு நிமால் சிறிபால டிசில்வா நாடாளுமன்றத்தில் அவசர காலச்சட்ட நீடிப்புத் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது;

அமைச்சர் ரஞ்சனை விடுதலைப் புலிகள்தான் கொலை செய்தனர் என்று பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் ரணதுங்கா கூறிவிட்டார் என்பதால் உலகம் அதை நம்பிவிடப்போவதில்லை.

விடுதலைப் புலிகள் தான் அக்கொலையை செய்தனர் என்றால், அது தொடர்பான சகல ஆதாரங்களையும் அரசாங்கம் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

இராணுவத்துடன் நெருக்கமாகச் செயற்பட்டு குறுகிய காலத்தில் அரசியல் ரீதியில் வெகுவாக உயர்ச்சி அடைந்து வந்தவர் ரஞ்சன் என்பதால், ஆளும் கட்சிக்குள் இருப்பவர்கள் சிலராலேயே அவர் கொலை செய்யப்பட்டிருக்கக் கூடும் என்ற சந்தேகத்தைக் கிளப்பும் வகையில் கட்டுரை ஒன்று 'த இக்கோனொமிஸ்ட்' சஞ்சிகையின் மார்ச் 15 இதழில் வெளியாகி இருக்கிறது. இச்சந்தேகத்தையும் அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

இப்படி திரு. நிமால் சிறிபால டி சில்வா சொன்னார்.

சுதந்திரக்கட்சி எம். பி. திரு. கே. பி. இரத்னாயகா சொன்னதாவது;

பத்து மாதங்களுக்கு முன்னர் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சண்டை ஆரம்பமானபோது எந்த நிலையில் விடுதலைப் புலிகள் இருந்தார்களோ அதே நிலைக்கு மீண்டும் அவர்கள் இன்று வந்துவிட்டார்கள் என்ற முடிவுக்கே வரவேண்டியுள்ளது.

திரு. பிரபாகரன் தான் இன்றைய சண்டையில் முக்கிய புள்ளி. அவருடன் பேசாவிட்டால் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. தமிழ் மக்கள் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் அரசாங்கம் செயற்பட வேண்டும்.

இப்படி திரு. ரத்னாயக்கா சொன்னார். [இ-எ]

### ஐ. தே. க வுக்கு ஈ. பி. டி. பி. ஆதரவாம்

கொழும்பு. மார்ச் 24

தென் பகுதியில் நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தல்களின்போது ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்கப்போவதாக ஈழ மக்கள் ஜனநாயக முன்னணி [ஈ. பி. டி. பி] அறிவித்து உள்ளது.

இம் முன்னணியின் தலைவர் டக்ளஸ் தேவானந்த ஆவார். [இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லங்கா சிமெந்து ஊழியரின் எதிர்காலம் என்ன?

## நிர்வாகம் ஆலோசனை கேட்கிறது

யாழ்ப்பாணம், மார்ச் 24

காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களுக்கு தொடர்ந்து சம்பளம் வழங்குவது தொடர்பாக நிறுவனம் தொழில் திணைக்களத்தின் ஆலோசனையைக் கேரியுள்ளது.

தொழிற்சாலை மூடப்பட்ட நிலையில், தொடர்ந்து தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்குவதா? வேலையில் தொடர்ந்து வைத்திருப்பதா? என்பது குறித்து ஆலோசனை வழங்குமாறு தொழில் திணைக்களத்திடம் அந்த நிறுவனம் ஆலோசனை கேட்டிருக்கிறது.

இந்த விடயங்கள் குறித்து ஆராயும் பொருட்டு எதிர் வரும் 10ஆம் திகதி கொழும்பில கலந்துரையாடல் ஒன்று நடைபெற இருக்கிறது.

இதனைத் தெரியப்படுத்தி சம்பந்தப்பட்ட நிர்வாகம் யாழ். அலுவலக அதிகாரிகளுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. [ஒ-3]

# யாழ். செஞ்சிலுவைச் சங்க நிர்வாகிகள் தெரிவு இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 24

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளைக்கான புதிய நிர்வாகிகள் பதவிகளுக்கான போட்டி இழுபறி நிலையில் உள்ளது.

செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைவர் டாக்டர் இ. தெய்வேந்திரன் தலைமையில் இன்று காலை 9 30 மணிக்கு யாழ் சென். ஜேம்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ள சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் புதிய தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் நிர்வாகச் செயற்குழு அங்கத்தவர்கள் ஆகியோர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய முக்கிய பதவிகளுக்குப் போட்டியிட மனுச் செய்திருக்கும் இப்போதைய நிர்வாகிகள் சிலர் நேரத்தில் இன்று தமது மனுக்களை வாபஸ் செய்யக்கூடும் என்று அறிய வருகிறது.

போட்டித் தவிர்ப்பை ஏற்படுத்தும் முகமாக அவர்கள் இவ்வாறான ஒரு யோசனையை நேற்று இரவு வரை பரிசீலனை செய்து கொண்டிருந்ததாக அவர்களுடன் நெருங்கிய வட்டாரங்களில் இருந்து அறிய வந்தது.

எனினும் இச்செய்தி எழுதப்படும் வரை அவர்கள் தமது மனுக்களை வாபஸ் பெறுவதற்கான கடிதங்களைச் சமர்ப்பிக்கவில்லை. [அ-5]

# ஈராக் அமைச்சரவையில் நேற்று திடீர் மாற்றம்

பக்தாத், மார்ச் 24

ஜனாதிபதி சதாம் ஹுசேன் தமது அமைச்சரவையை நேற்று மாற்றி அமைத்தார்.

துணைப் பிரதமராக இருந்த ஜனாப் அலி ஹூசைன் ஹமாடி பிரதமராக நியமிக்கப்பட்டார்.

ஜனாதிபதி சதாம் ஹுசேனை பதவி கவிழ்க்க சதி முயற்சி மேற்கொள்ளப்படுவதான வதந்திகளின் மத்தியில் அமைச்சரவை மாற்றம் இடம்பெற்றது.

இதுவரை வெளியுறவு அமைச்சராகப் பணிபுரிந்த தரீக் அஸீஸ் துணைப் பிரதமராக நியமிக்கப்பட்டார். புதிய வெளியுறவு அமைச்சராக அஹ்மத் ஹுசேன் என்பவர் நியமிக்கப்பட்டார். [ஒ-எ]


சுழிபுரம்

ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

**பொங்கல் விழா**

வழமைபோல் 26-3-91 செவ்வாய்க்கிழமை முதல் பொங்கலும், 2-4-91 சனிக்கிழமை இரண்டாம் பொங்கலும் மேற்படி கோவிலில் நடைபெறவுள்ளன. அடியார்கள் அம்பாளைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெறும் வண்ணம் இறைஞ்சுகின்றோம்.

-தேவஸ்தானப் பரிபாலன சபையினர்

[16200]





# கூட்டுப்படை அனுமதிக்கும் பொருள்கள்: வவுனியாவில் தடுப்பதை நிறுத்த நடவடிக்கை எடுக்க வற்புறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 24

கூட்டுப்படைத் தலைமையகத்தால் வடபகுதிக்குக் கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படும் பொருள்கள் கூட வவுனியாவில் வைத்துத் தடுக்கப்படுகின்றன. இது குறித்து அரச அதிபர் வவுனியா இராணுவத்தினருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற திணைக்களத் தலைவர்கள் மாநாட்டில் இவ்வாறு வலியுறுத்தப்பட்டது.

அரச அதிபர் திரு அன்ரன் அல்பிரட் தலைமையில் நடந்த பிரஸ்தாப கூட்டத்தில் செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுப் பிரதிநிதியும் கலந்து கொண்டார்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய முடிவுகள் சில வருமாறு:-

★ நுண்ணுயிர்க் கொல்லி மருந்து வகைகளை போதிய அளவு அனுப்புமாறு அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும்.

★ யாழ். அரச அதிபரின் கடிதத்துடன் கொண்டுவரப்படும் மண்ணெண்ணெய் குடா நாட்டுக்கு வராமல் இடையில் விற்பனையாகிறது. இந்த நிலையை நீக்க அரச அதிபரும், பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளும் கூட்டாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ வடபகுதிக்கு மின்சாரம் வழங்க வற்புறுத்தி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அரசுடன் மேல் மட்டப் பேச்சுக்களை நடத்த வேண்டும்.

★ யாழ் போதனா வைத்தியசாலையில் தற்சமயம் நடைமுறையிலுள்ள "பாஸ்" முறையை மறு பரிசீலனை செய்யவேண்டும். [அ-3]

## கிளிநொச்சிக்கு ரூ. 50 லட்சம் பணம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

கிளிநொச்சி மாவட்டத்துக்கு முதற்தடவையாக 50 லட்சம் ரூபா பணம் அனுப்பப்பட்டிருக்கிறது.

மக்கள் வங்கிக்கு வந்துசேர வுள்ள இந்தப் பணம் ப.நோ.கூ. சங்கங்களுக்கு வழங்கப்படும்.

கூட்டுறவுச் சங்கங்கள் நெல் கொள்வனவு செய்ய வசதியாகவே இந்தப் பணம் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ஒ 3]

## சூடுவிழுந்தானில் ஷெல்கள்

காங்கேசன்துறை, மார்ச் 24

பலாலி இராணுவத்தினர் வெள்ளிக்கிழமை மாலை முதல் நேற்றுக் காலை வரை ஷெல் தாக்குதல்களை நடத்தினர். அநேக ஷெல்கள் சூடுவிழுந்தான் பகுதியில் விழுந்து வெடித்தன.

தெல்லிப்பளை ரயில் நிலைய பாலம் ஒன்று சேதமானது. இரு குடிசைகள் தீப்பற்றி எரிந்து நாசமாயின. [ஒ 68]

## நல்லூர் மக்களின் தமிழீழ மீட்புநிதி

யாழ்ப்பாணம், மார்ச் 24

தமிழீழம் மீட்பு நிதி செலுத்த ஒப்புதல் அளித்த நல்லூர் உ. அ. அதிகார பிரிவைச் சேர்ந்தோர் நாளை பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை யாழ் மாவட்ட விடுதலைப் புலிகள் முன்னணித் தலைமைச் செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [ஒ]

## ஷெல்லுக்கு தொழிலாளி காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

ஆனையிறவு இராணுவத்தினர் நேற்று முன்தினம் மாலை குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் வீச்சுக்களை நடத்தினர்.

பத்துக்கும் மேற்பட்ட ஷெல்கள் ஊரியான் பகுதியில் விழுந்து வெடித்தன. ஷெல் ஒன்று இப்பகுதியில் வள்ளங்கள் கட்டுமரங்கள் என்பவற்றை சேதமாக்கியது. தொழிலாளியான நடேசபிள்ளை தேவராசா [22 வயது] என்பவர் காயமுற்றார். [ஒ-15]

## ராஜீவ் ஜெயலலிதாவை சந்திப்பார்

சென்னை, மார்ச் 24

தொகுதி உடன்பாடு காணும் நோக்குடன் எதிர் வரும் 30 திகதி இந்திரா காங்கிரஸும் அ. தி. மு. கவும் பேச்சுக்களை நடத்தவுள்ளன.

அன்றைய தினம் இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தி, அ. தி. மு. க. வின் பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதாவைச் சந்தித்து பேச இருப்பதாக தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி அறிவித்தார். [ஒ]

# அன்னை பூபதி நினைவாக அலங்காரப் பந்தல்கள்

கோண்டாவில், மார்ச் 24

அன்னை பூபதியின் மூன்றாம் ஆண்டு நினைவை யொட்டி மானிப்பாய், பளை ஆகிய இடங்களில் அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்பட்டு அன்னைபூபதியின் படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியிலுள்ள பாடசாலைகளிலும், வீட்டு வாசல்களின் முன்பும் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன. [இ-144]

## தேசிய....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

றக்கூடிய வாய்ப்பு தி. மு. கவுக்குக் குறைவாக இருப்பதாக கருதி அவர் இப்படிச் சொன்னாரா? அல்லது மாநில அரசியலில் இருந்து விடுபட்டு தேசிய அரசியலில் ஈடுபடும் விருப்பம் கொண்டு சொன்னாரா என்று குறித்து சென்னை அரசியல் வட்டாரங்களில் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. [ஒ-எ]

## ஷப்ரா....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வும் ஒன்றாகும். அது ஒரு பொதுக்கம்பனியாகவும் மாற்றப்பட்டுள்ளது. ஷப்ராவின் அலுவல்களில் விரைவில் கம்பியூட்டர் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்படும். [அ]


## முக்கிய அறிவித்தல்

ஆர் வி. ஜி பீடி பெயரில் போலி பீடிகள் விற்பனை செய்யப்படுவதாக அறிய வந்துள்ளோம். போலி ஆர். வி. ஜி பீடிகள் விலையிலும், தரத்திலும் குறைந்தவை என்பதை பாவனையாளர் கவனத்திற்கு அறியத்தருகிறோம்.

அசல் ஆர். வி. ஜி பீடிகள் எமது ஸ்தாபன வாகனங்கள் மூலமே விற்பனை செய்யப்படுகின்றன.

குறைந்த விலையில் விற்பனையாகும் போலி ஆர் வி. ஜி பீடிகளை வாங்கி ஏமாறாதீர்கள்.

போலி ஆர். வி. ஜி பீடி விற்பனையாளர் பற்றிய தகவல்கள் வரவேற்கப்படும்.

**ஆர். வி. ஜி. நிர்வாகம்**

58. குறுக்குத் தெரு

நல்லூர், யாழ்ப்பாணம்.

[16167]


## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி கோபாலபிள்ளை

திருமதி சரஸ்வதி கோபாலபிள்ளை 23-03-1991 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற Dr நா. கோபாலப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், தேவதாஸை (U. K). திருமதி சத்தியவதி சேனாதிராஜா, Dr. சங்கரநாராயணன் [அநுராதபுரம்], சிவஞானம் ஆகியோரின் அருமைத்தாயாரும், றோஸ், Dr S S. சேனாதிராஜா, மலிகா ஆகியோரின் மாமியாரும், திருமதி சித்திரா பேரின்பநாதன் (U. K.), மீரா, றேய், ஷேன், ஹரி [பாலேந்திரன்] ஆகியோரின் அருமைப் பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 24-3-91 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

சிவஞானம் [மகள்]

43 அன்னசத்திர ஒழுங்கை,

நல்லூர், யாழ்ப்பாணம்.

[16208]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 24-03-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org